



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரமளான் பிறை 12 ஹிஜ்ரி 1437
Friday of Ramadan 12th Hijri 1437
17th June 2016

| | |
|---|---|
| **தலைப்பு:** | **சுயமாக தன்னிறைவு பெறுதல்!** |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | சுயமாக தன்னிறைவு பெறுதல்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! கொடுப்பவனும் அவனே தடுப்பவனும் அவனே. அனைத்து விதமான நல்லவைகளை தனது வேதத்தில் குறிப்பிட்டுள்ளான்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(59:18)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் (மெய்யாகவே) அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் (மறுமை) நாளுக்காக, தான் எதனைத் தயார்படுத்தி வைக்கின்றான் என்பதைக் கவனித்து அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்துகொள்ளவும். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்”

**நோன்பாளிகளே**! இந்த மாதத்திலும், ஏனைய நாட்களிலும் நீங்கள் செய்யும் வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக. நாம் அனைவரும் ரமளானில் இருக்கிறோம். சிரமங்களை தாங்கிக் கொள்வதற்கான பயிற்சியை பெறும் வகுப்பறையாக இந்த மாதம் இருக்கிறது. சோதனையான கட்டங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற இங்கித்தை கற்றுத் தருகிறது. **சுயமாக தன்னிறைவு பெறுதல் என்றால் என்ன?** அதாவது, தன்னம்பிக்கையை உருவாக்கி அதற்கான ஆற்றலை பெறுவதற்கான ஊக்கத்தை வழங்குவதாகும். எதிர்காலத்தை மிக துல்லியமாக திட்டமிட்டு அதற்கான முயற்சிகளில் இறங்குவதாகும். பொறுப்புகளை மனமுவந்து ஏற்று அவற்றை முழுமையாக



www.sunnathwaljamath.com

நிறைவேற்றுவதாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அகில உலகின் இரட்சகனிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் பண்பாடு. மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டிய இயலாமையை ஒழிப்பது. இவற்றையெல்லாம் குறிப்பதுதான் சுயமாக தன்னிறைவு பெறுதல் என்பதாகும். மேலும் இது நபிமார்களின் பண்பாடாகும். அவர்கள் எல்லாச் சூழ்நிலையிலும் யாரையும் சார்ந்து இருக்கவில்லை. சுயமாக உழைத்து தங்களுடைய தேவைகளையும் தங்களை சார்ந்து இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டார்கள்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَا أَكَلَ أَحَدٌ طَعَامًا قَطُّ خَيْرًا مِنْ أَنْ يَأْكُلَ مِنْ عَمَلِ يَدِهِ، وَإِنَّ نَبِيَّ اللَّهِ دَاوُدَ عَلَيْهِ السَّلاَمُ كَانَ يَأْكُلُ مِنْ عَمَلِ يَدِهِ

“ஒருவர் தம் கையால் உழைத்து உண்ணும் உணவை விடச் சிறந்த உணவை ஒருபோதும் அவர் உண்ணவில்லை. அல்லாஹ்வுடைய நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே வாழ்ந்தார்கள்” (2072 : البخاري)

தன்னுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈடுபடும் எல்லாவிதமான நல்ல முயற்சிகளை இதன் பொருள் உள்ளடக்கி இருக்கிறது. அதாவது இராணுவத்தில் பணி புரிவது, மருத்துவர், பொறியியல் வல்லுநர், வியாபாரி, ஆசிரியர் மேலும் இதுபோன்ற அனைத்து விதமான பணிகளையும் இதுசார்ந்த மற்ற வேலைகளையும் குறிக்கிறது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் சுயமாகவே உழைத்து வாழ்ந்துள்ளார்கள். யாரையும் சாராமல் சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை மேற்கொண்டார்கள். ஆரம்ப காலங்களில் ஆடு மேய்த்து வந்தவர்கள் பிற்காலத்தில் வணிகத்திலும் ஈடுபட்டார்கள்.

وَقَالَ ﷺ : مَا بَعَثَ اللَّهُ نَبِيًّا إِلاَّ رَعَى الغَنَمَ. فَقَالَ أَصْحَابُهُ: وَأَنْتَ؟ فَقَالَ ﷺ : نَعَمْ، كُنْتُ أَرْعَاهَا عَلَى قَرَارِيطَ لأَهْلِ مَكَّةَ

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், “அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை!” என்று கூறினார்கள். அப்போது அவர்களுடைய ஸஹாபாக்கள், “நீங்களுமா?” என்று கேட்டார்கள். “ஆம்! மக்காவாசிகளின் சில கீராத்(பணத்திற்காக) கூலிக்காக ஆடு மேய்ப்பவனாக நான் இருந்தேன்!” என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். (2262 : البخاري)

அதாவது குறிப்பிட்ட ஓர் அளவிலான கூலியை பெறுவதற்காக இந்த பணியை செய்தார்கள். அதேபோன்று ஸஹாபாக்களும் யாரையும் சார்ந்து இருக்காமல் சுயமாக உழைத்து தங்களுடைய தேவைகளையும் மற்ற பொறுப்புகளையும் நிறைவேற்றிக் கொண்டார்கள்.

فَهَذَا عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَدِمَ الْمَدِينَةَ فَذَهَبَ إِلَى السُّوقِ، وَعَمِلَ وَاجْتَهَدَ، وَرَبِحَ مَالاً كَثِيرًا

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்தபோது, ஸஅத் இப்னு ரபீஉ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது ஆதரவில் எடுத்துக் கொண்டார்கள். இருவரையும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகோதரர்களாக ஆக்கினார்கள். ஸஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வசதி படைத்தவராக இருந்தார். எனவே அவர் அப்துர் ரஹ்மானிடம், "என்னுடைய செல்வத்தைச் சரி பாதியாக உமக்குப் பிரித்துத் தருகிறேன். (என் மனைவியரில் ஒருத்தியை விவாகரத்து செய்து) உமக்கு மண முடித்துத் தருகிறேன்!" எனக் கூறினார். அதற்கு அப்துர் ரஹ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எதனையும் ஏற்காமல், "உம்முடைய குடும்பத்திலும் செல்வத்திலும் அல்லாஹ் பரக்கத் செய்வானாக! எனக்குக் கடை வீதியைக் காட்டுங்கள்!" என்று மட்டும் கூறினார்கள். நேராக கடைவீதிக்கு சென்றார்கள். கடும் முயற்சியில் பணி செய்தார்கள். இதனால் அதிகமான செல்வத்தை இலாபமாக ஈட்டினார்கள். (البخاري: 2049)

அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையினாலும், யாரையும் சார்ந்து இருக்காமல் வாழ வேண்டும் என்கிற மன உறுதியாலும் படிப்படியாக முன்னேறி பணக்கார முஸ்லிமாக உயர்ந்தார்கள். இதனைப் பற்றி அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

قَالَ أَنَسٌ رَضِيَ اللَّهُ عَنْهُ: لَقَدْ رَأَيْتُهُ قُسِمَ لِكُلِّ امْرَأَةٍ مِنْ نِسَائِهِ بَعْدَ مَوْتِهِ مِائَةُ أَلْفِ دِينَارٍ

"அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மரணத்திற்கு பிறகு சொத்துகள் பங்கிடப்பட்டன. அவர்களுடைய ஒவ்வொரு மனைவிக்கும் ஒரு இலட்சம் தினார் (தங்க காசு) களை சொத்தாக பங்கு வைக்கப்பட்டதை நான் கண்டேன்" ((235/9) : فتح الباري لابن حجر)

தன்னுடைய இறைவன் மீது பொறுப்புகளை ஒப்படைத்து, யாரையும் சார்ந்து இருக்க வேண்டாம் என்கிற மன உறுதியில் நின்று கடுமையாக உழைத்த இந்த ஸஹாபியின் முயற்சியை நீங்கள் சிந்தித்து பாருங்கள். யாரிடமும் உதவி கேட்கக்கூடாது என்கிற தனது இலட்சியத்தில் மிக உறுதியாக இருந்தார்கள். இதனால் மிகவும் சுபிட்சமான வாழ்வை வாழ்ந்தார்கள். மதிப்புவாய்ந்த பெரும் புள்ளியாய் சமுதாயத்தில் உயர்ந்தார்கள்.

**தொழுகையாளிகளே! சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று நமது பிள்ளைகளுக்கு நாம் ஏன் பயிற்சி கொடுக்க வேண்டும்?** காரணம் நமது தேசத்திற்கு உழைப்பின் மீது உறுதிமிக்க இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும், அந்த பிள்ளைகள் முந்தைய தலைமுறையின் பெருமைகளை கட்டிக் காக்க வேண்டும், புதுமையாக சிந்திப்பது, எதிலும் முன்னோடியாக இருப்பது, தொலைநோக்கோடு எதனையும் அணுகுவது, எல்லா விதமான வணிக போட்டிகளை சமாளிப்பது, யாருடைய துணையையும் எதிர்பார்க்காமல் முயற்சிகளில் வேகமாக இறங்குவது, தன்னளவில் பல திறமைகளை பெற்று சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை நமது இளைய தலைமுறை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் அவர்களை பண்படுத்த வேண்டும்.

இமாம் ஷாபிஈ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

مَا حَكَّ جِلْدَكَ مِثْلُ ظُفْرِكْ          فَتَوَلَّ أَنْتَ جَمِيعَ أَمْرِكْ

"உம்முடைய நகத்தின் முனையைப் போன்று உனது தோலை சொரிந்து விடுவது எது? உன்னுடைய அனைத்து காரியத்தையும் அக்கறையோடு நீயே உனது பொறுப்பில் எடுத்துக் கொள்" (ديوان الشافعي 82/1)

(குறிப்பு: மேலே உள்ளவை கவித்தைக்கான நேரடி மொழிபெயர்ப்பு. இதன் கருத்து தோலில் அரிப்பு எடுத்தால் சொந்த நகத்தை வைத்து சொரிந்தால்தான் அரிப்பு அடங்கும். அதாவது உனக்கு அரிப்பு எடுத்தால் நீயே சொரிந்து கொள். யாருடைய உதவியையும் எதிர்பார்க்க வேண்டாம். அதேபோன்று உனக்கு ஒரு தேவை ஏற்பட்டால் நீயே முயற்சி செய்து அந்த தேவையை நிறைவேற்றிக் கொள்! யாருடைய உதவியையும் எதிர்பாக்காதே என்பது இந்த கவிதையின் பொருளாகும்-மொழிபெயர்ப்பாளர்)

ஒவ்வொரு மனிதனும் யாரையும் சார்ந்து இருக்காமல், தன்னுடைய தேவைகளை தனது முயற்சியால் நிறைவேற்றிக் கொண்டு, சுயமாக தன்னிறைவு பெற்று வாழ முயற்சிக்கும் போது சிறந்த மாற்றத்திற்கான ஒரு சமூகத்தை நம்மால் உருவாக்க முடியும். இதனால் அனைவருக்கு மன உறுதி வலிமை பெறும். நிமிர்ந்த நன்னடை, நேரிய பார்வை, வளமிக்க ஆற்றல், என ஒன்றன் பின் ஒன்றாக இந்த சமூகம் எழுச்சி அடையும். இதனால் ஒவ்வொருவரும் தனது சொந்த முயற்சியினால் தனக்கும் தனது சமூகத்திற்கும் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஒவ்வொரு தனி மனிதன் மற்றும் அவனது சூழ்நிலையை கவனித்து அந்த முயற்சிகளின் அளவீடு மாறும். தன்னார்வத்தோடு ஒருவன் முயற்சிகளில் ஈடுபடும்போது அதனால் அவனுடைய குடும்பம், தேசம், சமூகம் உள்ளிட்ட அனைத்திற்கும் அதன் பலன் கிடைக்கிறது.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

احْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ، وَاسْتَعِنْ بِاللَّهِ وَلاَ تَعْجَزْ

"உனக்கு பயன்தரும் பொருளை நீ ஆசைப்படு, (அதற்காக) அல்லாஹ்விடமே உதவி கேள், கண்டிப்பாக சோர்ந்துவிடாதே!... " (2664 : مسلم)

'உனக்கு தேவையானவற்றை நீ ஆசைப்படு' என்று முதலில் சொல்லிவிட்டு 'அதற்காக நீ அல்லாஹ்விடம் உதவி கேள்' என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். அதாவது ஒருவன் சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை பெறுவதற்காக இறைவனிடம் உதவி கேட்கும் அணுகுமுறையை கற்றுக் கொடுக்கிறார்கள். இதன் மூலம் ஒருவன் சுய முன்னேற்றத்திற்காகவும், வாழ்வில் வளம் பெறுவதற்காகவும், முயற்சிகளில் ஈடுபடுவதற்கான ஓர் அங்கீகாரத்தை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழங்குகிறார்கள்.

فَحِينَ لَقِيَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ نَاسًا قَالَ: مَنْ أَنْتُمْ؟ قَالُوا: نَحْنُ الْمُتَوَكِّلُونَ. قَالَ: بَلْ أَنْتُمُ الْمُتَأَكِّلُونَ، إِنَّمَا الْمُتَوَكِّلُ الَّذِي يُلْقِي حَبَّهُ فِي الأَرْضِ، وَيَتَوَكَّلُ عَلَى اللَّهِ عَزَّ وَجَلَّ

ஒரு முறை ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஒரு கூட்டத்தினர் வந்து சந்தித்தனர். அவர்களை நோக்கி, “நீங்கெல்லாம் யார்?” என்று உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விசாரித்தார்கள். அதற்கு அவர்கள், “நாங்களெல்லாம் அல்லாஹ்விடம் பொறுப்பை ஒப்படைத்தவர்கள்” என்று பதில் கூறினார்கள். அதற்கு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், “இல்லை, நீங்கள் எந்த உழைப்பும் செய்யாமல் இலவசமாக சாப்பிட நினைப்பவர்கள். உண்மையாக இறைவனிடம் பொறுப்பை ஒப்படைத்தவர் யார் என்றால், அவர் தன்னுடைய விதையை பூமியில் அறுவடை செய்துவிட்டு பிறகு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டிருப்பார். அவர்தான் உண்மையில் அல்லாஹ்விடம் பொறுப்பை ஒப்படைத்தவர் ஆவார்” என்று அறிவுரை கூறினார்கள். யாரிடமும் தேவையாகாமல் எப்படியெல்லாம் பொருளீட்டி சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை பெறலாம் என்கிற ஆலோசனைகளை வழங்கி அவர்களை அனுப்பிவைத்தார்கள். ((507/2) : جامع العلوم والحكم)

**நோன்பாளிகளே! சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை நம்முடைய பிள்ளைகள் எப்போது பெறுவார்கள்?** ஆம் இது ஒரு வாழ்வியல் கலையாகும். பிள்ளைகளின் சிறு வயதிலிருந்தே இதற்கான பயிற்சியை நாம் தொடங்கிவிட வேண்டும். முந்தைய காலங்களில் அரபுலக மக்கள் தமது பிள்ளைகளை வெளி உலகிற்கு அனுப்பி மொழியறிவையும் வேறுபல திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வைத்தார்கள். இதனால் அந்த பிள்ளைகள் வெளியே செல்லும்போது பாலைவன சிரமங்களையும் அனுபவித்தார்கள். இப்படி சிரமமான சூழ்நிலைகளில் சுயமாக முயற்சி செய்து தம்மை எப்படி தற்காத்துக் கொள்ள வேண்டும் என்கிற பயிற்சியை அனுபவரீதியாக பெற்றார்கள்.

அப்துல் முத்தலிப் அவர்களும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இதுபோன்ற காரணத்திற்காக ஸஅத் கோத்திரத்தாரிடம் அனுப்பி வைத்தார்கள். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் :

اسْتُرْضِعْتُ فِي بَنِي سَعْدِ بْنِ بَكْرٍ

“நான் ஸஅத் இப்னு பக்ருடைய கோத்திரத்தாரிடம் பால் குடித்து வளர்ந்தேன்” (146/1 : دلائل النبوة للبيهقي)

இதனடிப்படையில்தான் இளைஞர்களை நெறிப்படுத்தி தேசிய பொதுப்பணிகளிலும் சேவைகளிலும் ஈடுபடுத்துகிறோம். இதனால் இளைஞர்களுக்கு சுய ஆற்றல் வளர்கிறது, தன்னம்பிக்கை மேலோங்குகிறது, யாரிடமும் தேவையாகாமல் சுயமாக வாழ்ந்துவிடலாம் என்கிற மன உறுதியை பெறுகிறார்கள். சிரமங்களை எப்படி சமாளிக்க வேண்டும், இக்கட்டான நிலைகளில் எப்படி சமயோசிதமாக செயல்படுவது, தொலைநோக்கு பார்வையோடு தற்காலிக

பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது, சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை பெறுவதற்கான செயல்திட்டங்களை வடிவமைத்தல், என பல்வேறு வகையான சுய ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்கிறார்கள்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டுதல் அதன் பிறகு ஸஹாபாக்களின் வாழ்வியல் நெறிகள் அதன் பிறகு மாண்புமிகு மன்னர் ஷைக் ஜாயித் (அல்லாஹ் அவர்களின் ஒதுங்குமிடத்தை உயர்நிலையில் வைப்பானாக) அவர்களின் அறிவுரைகள், அதன் பிறகு அடிப்படைகளை கட்டமைத்துக் கொடுத்த நம் முன்னோர்கள் என அனைவரிடமும் நமக்கு தேவையான படிப்பினைகள் உள்ளன.

பல சோதனைகளையும், சிரமங்களையும் நேரடியாக எதிர்கொண்டு யாரிடமும் தேவையாகாமல் சுயமாக உழைத்து தன்னிறைவு பெறும் வழிவகைகளை அறிந்து கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்தி வெற்றியும் பெற்றுள்ளார்கள். இதன் விளைவாக ஐக்கிய அரபு அமீரக தேசத்தை மிகச் சிறப்பாக கட்டமைத்துக் கொண்டார்கள். இந்த கலாச்சாரத்தையும் பண்பாடுகளையும் நெறிப்படுத்தி நிலைநிறுத்திக் கொண்டார்கள். உறுதிமிக்க கட்டமைப்புகளையும், கட்டிடங்களையும் எழுப்பினார்கள். சிதறிக் கிடந்த பல்வேறு கோத்திரங்களை ஓரணியில் திரட்டி ஒற்றுமையை நிலைநாட்டினார்கள், தேசத்தின் பெருமையை அனைவருக்கும் உணர்த்தினார்கள்.

நம்மில் எத்தனை பேர் இத்தகைய அணுகுமுறைகளை நமது சந்ததிகளுக்கு கற்றுத்தர தயாராக இருக்கிறோம்? அதற்கான தேவையையும், முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்ததாக தெரியவில்லை. **எனவே சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வியலை பெறும் வழிகளை தம் பிள்ளைகளுக்கு வலியுறுத்த யாரெல்லாம் முன்வருகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்?**

பொதுவாக ஒவ்வொரு பிள்ளையும் தன்னுடைய தந்தை மற்றும் தாயிடம்தான் தனக்கான முதல் அனுபவ அறிவை பெற்றுக் கொள்கிறது. பெற்றோர்களின் அணுகுமுறைகளை கூர்ந்து கவனிக்கிறது, சோதனைகளையும் சிரமங்களையும் எப்படி எதிர்கொள்வது, அதற்கான எதிர்வினையை இலாவகமாக கையாள்வது எப்படி என்கிற வித்தையையும் ஒரு பிள்ளை தன் பெற்றோர்களிடமே கற்றுக் கொள்ள முயற்சிக்கும். எனவே இதனை கருத்தில்கொண்டு ஒரு பெற்றோரின் அணுகுமுறை அமைந்தால் அதன் தாக்கத்தை பிள்ளைகளிடம் உணரலாம். இதனால் ஒவ்வொரு பெற்றோர்களும் யாரையும் சார்ந்து இருக்காமல் சுய உழைப்பில் தன்னிறைவு பெற்ற வாழ்வை பெற முயற்சிக்க வேண்டும்.

நேரம் அமையும் போதெல்லாம் தமது நடவடிக்கைகளைப் பற்றி பிள்ளைகளுக்கு ஒளிவுமறைவு இல்லாமல் விளக்கிக் கூற வேண்டும். சில சூழலில் முடிவு எடுக்கும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் ஆற்றலை விளங்கி அதற்கேற்ற அறிவுரைகளை நம்மால் வழங்க முடியும். தேவைப்படும்போது பிள்ளைகளுக்கு சுதந்திரமான வாய்ப்புகளை வழங்கி அவர்களின் பொறுப்புணர்ச்சியை மேம்படுத்த வேண்டும். இடையிடையே நிர்வாகத்திறனின் நெளிவு சுளிவுகளை நாம் கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். வாய்ப்புகளை வழங்கி பிள்ளைகளை களத்தில் இறக்கி அனுபவரீதியான பயிற்சியை



www.sunnathwaljamath.com

கொடுப்பதற்கு நாம் தயக்கம் காட்டக்கூடாது. அதுசமயம் நாம் அவர்களை தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்த வேண்டும்.

பெற்றோர்களை இழந்ததால் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் பராமரிப்பிலேயே வளர்ந்து வந்தார்கள். அப்துல் முத்தலிப் அவர்களுக்காக கஃபாவின் நிழலில் ஒரு விரிப்பு விரிக்கப்படும். மரியாதை நிமித்தமாக அந்த விரிப்பில் வேறு யாரும் உட்காரமாட்டார்கள். அதுசமயம் சிறு வயதில் இருந்த நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த விரிப்பில் உட்கார்ந்து கொள்வார்கள். ஆனால் அதில் உட்கார வேண்டாம் என்று மற்றவர்கள் தடுப்பார்கள். அதனைக் கண்ட அப்துல் முத்தலிப் அவர்கள், “என்னுடைய செல்ல பிள்ளையை விட்டுவிடுங்கள், பிற்காலத்தில் இப்பிள்ளைக்கு பல மரியாதைகள் கிடைக்கும்” என்று கூறி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முதுகில் அன்பாக தடவிக் கொடுப்பார்கள். ( سبل الهدى والرشاد في سيرة خير العباد (129/2)

பெரியவர்களோடு பழகி அவர்களின் சபைகளில் அமர்ந்து அனுபவங்களை பெறும் வாய்ப்பை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் தஆலா வழங்கி உதவி புரிந்துள்ளான். இதனால் அவர்கள் பிற்காலத்தில் இந்த அனுபவங்களில் பெற்ற படிப்பினைகள் மூலம் பெரும் பெரும் மனிதர்களையும் மிக எளிதில் நிர்வாகம் செய்தார்கள். பல சமுதாயத்தவருக்கு தலைமை வகித்தார்கள்.

யா அல்லாஹ்! எங்களுக்கு ஆரோக்கியமான சிந்தனை வளர்ச்சியை கொடுப்பாயாக!! நேர்பட நடப்பதற்கான மன உறுதியை தந்தருள்வாயாக!!! பயனுள்ளவற்றை நாங்கள் பெறும் வழிகளை எங்களுக்கு எளிமைப்படுத்தி தருவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! தொழுகையாளிகளே!! அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். அவனுக்கு தொடர்ந்து கீழ்படிந்து நடங்கள். யாரிடமும் தேவையாகாமல் சுயமாக நிற்கும் தன்னிறைவு பெற்ற வாழ்வை நமது அன்றாட நடவடிக்கைகளிலும், பணிகளிலும் நடைமுறைபடுத்த வேண்டும். இது அல்லாஹ்வுடைய பாதையில் செல்வதற்கான ஒரு முயற்சியாகும். இந்த முயற்சிக்காகவும் அல்லாஹ் கூலி தருகிறான். காரணம் இவ்வாறான முயற்சிகளின் மூலம் பல அனுபங்களும், போதுமென்ற மனநிலையும் கிடைக்கும். யாருக்கெல்லாம் உதவி செய்ய வேண்டும் என்கிற அனுபவம் கிடைக்கும். வெட்கமில்லாமல் பிறரிடம் கையேந்தி கௌரவமாக பிச்சை எடுக்கும் இழி நிலையிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

ஒரு மனிதர் வெளியில் சென்று கடுமையாக வேலை செய்துவிட்டு வீடு திரும்புகிறார். இவரைக் கண்ட ஸஹாபாக்கள், “அல்லாஹ்வின் தூதரே! இவர் அல்லாஹ்வின் பாதையில் சென்றிருந்தால் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கும்?” என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:



www.sunnathwaljamath.com

إِنْ كَانَ خَرَجَ يَسْعَى عَلَى وَلَدِهِ صِغَارًا فَهُوَ فِي سَبِيلِ اللَّهِ، وَإِنْ كَانَ خَرَجَ يَسْعَى عَلَى أَبَوَيْنِ شَيْخَيْنِ كَبِيرَيْنِ فَهُوَ فِي سَبِيلِ اللَّهِ، وَإِنْ كَانَ يَسْعَى عَلَى نَفْسِهِ يُعِفُّهَا فَهُوَ فِي سَبِيلِ اللَّهِ

“அவர் தன்னுடைய சிறுவயது குழந்தைகளுக்காக வெளியே சென்று முயற்சியில் ஈடுபட்டிருந்தால் நிச்சயம் அவர் அல்லாஹ்வுடைய பாதையில்தான் இருக்கிறார். அவர் வயது முதிர்ந்த தன்னுடைய பெற்றோர்களுக்காக வெளியே சென்று முயற்சியில் ஈடுபட்டிருந்தால் நிச்சயம் அவர் அல்லாஹ்வுடைய பாதையில்தான் இருக்கிறார். வேறு யாரிடமும் கையேந்தாமல் சுயமாக வாழ்வதற்காக அவர் வெளியே சென்று முயற்சியில் ஈடுபட்டிருந்தால் நிச்சயம் அவர் அல்லாஹ்வுடைய பாதையில்தான் இருக்கிறார்” (282 : المعجم الكبير للطبراني)

நிச்சயம் இதுதான் ஒரு நியாயமான வழிமுறையாகும். அதாவது தன்னம்பிக்கையோடு முயற்சிகளில் ஈடுபட்டு நிறைவாகவும், மேம்பட்டும் வாழ முடியும். மன உறுதியும், நன்மையான செயல்களில் ஈடுபடுவதற்கான தன்னம்பிக்கையும் வளரும். சுயமாக தன்னிறைவு பெற்ற வாழ்வை பெறும் ஆளுமைத்திறனை வளர்த்துக் கொண்டால் பொதுச் சேவையில் ஈடுபட ஆர்வம் ஏற்படும். எனவே எந்த உள்நோக்கமும் இல்லாமல் தான் சார்ந்த தேசத்தில் சமூக சேவையில் ஈடுபட வேண்டும். சமூக பொறுப்புகளை கட்டிக்காக்கும் பிள்ளைகளாக நமது பிள்ளைகளை உருவாக்கி உள்ளோமா என்கிற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். எல்லாச் சூழ்நிலையிலும் மன உறுதியோடும் தன்னம்பிக்கையோடும், இறைவனின் கிருபையை எதிர்நோக்கி தன்னளவில் தன்னிறைவு பெற்ற வாழ்வை பெறுவதோடு சமூக பணிகளிலும் நமது பிள்ளைகள் ஈடுபட வேண்டும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )



www.sunnathwaljamath.com

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண்

அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com